00018

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPD3531/ESD1231** – கலைத்திட்டக் கற்கையும் செயற்பாடும் - (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 08.07.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. மொழி என்றால் என்ன என்பதை வரையறுக்குக.
2. மொழியின் **ஐந்து (05)** முக்கிய அம்சங்களை எழுதுக.
3. மொழி கையகப்படுத்தலில் (Acquisition) **நான்கு (04)** நிலைகளைக் குறிப்பிடுக.
4. ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் கேட்டல் குறைபாடுள்ள மாணவர்களின் **மூன்று (03)** பண்புகளை சுருக்கமாக விளக்குக.
5. அறிவித்தலொன்றில் சேர்க்கப்பட வேண்டிய **ஐந்து (05)** முக்கிய விடயங்களை எழுதுக.
6. தேர்ச்சிகள் அடிப்படையிலான கலைத்திட்டத்தை சுருக்கமாக விளக்குக.
7. ஆரம்பக்கல்வி நிலையில் கற்றல் சாதனங்களை பயன்படுத்தவதன் அனுகூலங்கள் **மூன்றினை (03)** விளக்குக.
8. உங்கள் சொந்த மொழி நடையில் ஆக்கச் சிந்தனையை விளக்குக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** 1997 இல் ஆரம்பக்கல்வியில் புதிய கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியதன் **ஐந்து (05)** காரணிகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆரம்பக் கல்வியின் முதன்மை நிலைகளை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் விமர்சன ரீதியாக ஆராய்க.

- மூன்று முக்கிய கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது – கணிப்பீடு மற்றும் மதிப்பீடு
- கற்பித்தல் - கற்றல் முறைமைகள் - நுழைவுத் தேர்ச்சிகள்
- வகுப்பறை சுற்றாடல்

**(10 புள்ளிகள்)**

10.

**i.** ஆரம்பக் கல்வியில் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவத்தை உண்மைக்காரணிகளை முன்வைப்பதன் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** "ஆசிரியரின் பொறுப்பு, அவனது/அவளது வகுப்பில் உள்ள பெரும்பாலான மாணவர்களிடம் விருப்பத்திற்குரிய கற்றல் தேர்ச்சிகளை (Desired learning Competency) வளர்ப்பதாகும்." இவ் அறிக்கையை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

**i.** ஆரம்ப வகுப்பில் மொழியைக் கற்பிக்கப் பயன்படும் **ஐந்து** (05) கற்றல் சாதனங்களை பெய்ரிட்டு சுருக்கமாக விளக்குக. (தேவையான இடங்களில் வரைபடங்களைப் பயன்படுத்துக).

(10 புள்ளிகள்)

**ii.** கற்பித்தல் - கற்றல் சாதனங்களை பயன்படுத்தும் போது ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டிய **ஐந்து** (05) காரணிகளைப் பற்றி கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

12.

**i.** "மாணவர்களிடம் மொழித்திறனை விருத்தி செய்வது ஆரம்பப்பிரிவு ஆசிரியரின் முக்கிய பொறுப்பாகும்" இவ் அறிக்கையை உண்மைக் காரணிகள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** மாணவர்களிடம் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்கு வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) செயற்பாடுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

**i.** ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடம் இனங்காணக்கூடிய எழுதுதல் தொடர்பான பிரச்சினைகள் **ஐந்தினை** (05) சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** ஆசிரியரென்ற வகையில் நீங்கள் மேற் குறிப்பிட்ட பிரச்சினையொன்றை தீர்ப்பதற்கு எவ்வாறு தலையிடுகிறீர்கள் என்பதை படிநிலைகளுக்கூடாக விளக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -